# செய்தி மடல்

## NEWSLETTER - SEPTEMBER 2011

தமிழ்க் கல்வி நிலையம் ஹோம்புஷ் Tamil Study Centre Homebush Inc.
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au mobile: 0426 463 795 (Saturdays)
info@tsch.org.au

### வெள்ளிவிழா 2012 - இளங்கதிர் வெளியீடு

எமது கல்வி நிலையம் அடுத்த வருடம் தனது 25வது ஆண்டு கலைவிழாவை வெள்ளிவிழாவாகக் கொண்டாடவுள்ளது. இவ்விழாவின் ஒரு பகுதியாக எமது மாணவர்களின் ஆக்கங்களை அவர்களது கையெழுத்துப் பிரதியாகவே இளங்கதிர் என்ற தலைப்பில் புத்தகமாக வெளியிட உள்ளோம். இவ்வாக்கங்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதத்திற்கு முன்பாக உங்களது வகுப்பு ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப் படவேண்டும். இவ்வாக்கங்களுக்கு பெற்றோர்களாகிய உங்களது ஒத்துழைப்பும் ஆதரவும் மிக அவசியம் என்பதுடன், தரமான ஆக்கங்களே இளங்கதிரில் பிரசுரிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### பேச்சுப்போட்டி பரிசளிப்புதினம் - 24.09.2011

இம்முறை இடம்பெற்ற தமிழ் பேச்சுப்போட்டியில் அதிக மாணவர்கள் மிக ஆர்வத்துடன் பங்குபற்றி பரிசில்களைப் பெறவுள்ளார்கள். இவர்களுக்கான பரிசில்கள் 24ம் திகதி செப்டம்பர் மாதம் பி.ப 3:00 மணிக்கு வழங்கப்படும்.

### வாணி விழா – 01.10.2011

வருடா வருடம் எமது தமிழ்க் கல்வி நிலையம் முப்பெரும் தேவியர்களை வழிபட்டு நவராத்திரி தினத்தில் விழாக் கொண்டாடுவது வழக்கம். இவ்விழாவானது எமது கல்வி நிலைய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் சிறப்புறவுள்ளது. இவ் வைபவத்திற்கு வருகைதந்து முப்பெரும் தேவியர்களின் அருளைப் பெறுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இவ்விழாவினைச் சிறப்பித்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவிட பெற்றோர்கள் தயவுசெய்து உங்கள் பங்களிப்பாகிய $10 செலுத்தி எமக்கு ஆதரவுதருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.





### அமைச்சர் விருது 2011

அண்மையில் இடம்பெற்ற அமைச்சர் விருது வைபவத்தில் எமது பாடசாலை மாணவி **செல்வி அபிராமி ரவீந்திரன்** (மேற்பிரிவு) சிறப்பு விருதினையும் **செல்வி கேசவி விக்னராஜா** (கீழ்ப்பிரிவு) அதிசிறப்பு விருதினையும் பெற்றுள்ளனர். இவ்வாறான முக்கியத்துவம் வாய்ந்த பரிசுகளைப்பெற்ற எமது மாணவர்களுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் எமது கல்வி நிலையம் பாராட்டைத் தெரிவிக்கின்றது. இவ்வைபவத்தில் Tamil Beats என்ற சிறப்பு நடன நிகழ்ச்சியை Dr.யசோதரபாரதி சிங்கராயர் அவர்கள் தயாரித்து வழங்கினார். இந்நிகழ்ச்சி அனைவரது பாராட்டையும் பெற்றது. இவ்வைபவம் 05.09.2011 அன்று University of New South Wales இல் சிறப்பாக இடம்பெற்றது. இந்நிகழ்வின் ஒரு பகுதியினை எமது இணையத்தளத்தில் காணலாம். www.tsch.org.au

### NSW Federation of Community Language Schools – Annual Dinner 2011

கூட்டமைப்பினால் 2011 இல் நடாத்தப்பட்ட இராப்போசன விருந்தில் அனைத்துப் பாடசாலைகளும் கலந்து கொண்டு இவ்வைபவத்தை சிறப்பித்தனர். இவ்விருந்து வைபவம் Cyprus Community Hall, Stanmore இல் அண்மையில் இடம்பெற்றது. இதற்கு பல அரசியல் பிரமுகர்களும் வருகை தந்திருந்தார்கள். பல்லினக் கலாசாரத்தை வெளிப்படுத்துமுகமாக சில கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இவ் வைபவத்தில் எமது கல்விநிலைய மாணவர்களால் தயாரிக்கப்பட்ட குறுந்திரைப்படத்துக்கு Participation சான்றிதழ் கிடைத்துள்ளது. இக் குறுந்திரைப்படத்தை தயாரித்து வழங்கிய எமது மாணவர்களுக்கு, எமது கல்வி நிலையம் பாராட்டைத் தெரிவிக்கின்றது.

### சிறுவர்களுக்கான விசேட தமிழ் வகுப்பு

தமிழை தமது வீடுகளில் உரையாடிப் பயிற்சி செய்வதற்கு சந்தர்ப்பம் குறைவாக இருக்கும் சிறுவர்களுக்கு, தாய்மொழியான தமிழை ஆரம்பத்தில் புரிந்து கொள்வதற்கும், அவர்களின் ஆர்வத்தை ஊக்குவிப்பதற்கும் விசேட தமிழ் வகுப்பு சனிக்கிழமைகளில் பி.ப. 1.00 மணி முதல் 2.00 மணி வரை நடைபெறுகின்றது. மேலதிக விபரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

## <u>பாடசாலைக் கட்டணம்</u>

தமிழ்க் கல்வி நிலையத்தின் அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு அரசாங்கம் தரும் பணத்தை விட அதிகமாகத் தேவைப் படுவதால், பெற்றோர்கள் தயவு செய்து பாடசாலைக் கட்டணத்தை நிலுவையின்றி உடனடியாக செலுத்துமாறு நிர்வாகக் குழுவினர் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றனர்.

## <u>ஞாயிறு தமிழ்ப் பாடசாலை</u>

பல்கலைக் கழகங்களில் படிக்கும் மாணவர்களுக்கும், பாடசாலைப் படிப்பை முடித்தவர்களுக்கும், மற்றும் வளர்ந்தவர்களுக்கும், ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை தமிழ்ப் பாடம் கற்பிக்கப்பட்டு வருகிறது. இதனால் இளைஞர்கள் தமிழை கற்பதற்கு மிகவும் வசதியாக உள்ளது. மேலதிக விபரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

## <u>இணையத்தளம்</u>

எமது கல்வி நிலைய இணையத்தளம் multimedia வசதிகளைக் கொண்ட ஒரு இணையத்தளமாக வலுப்பெற்றுள்ளது. மாணவர்களின் தரமான ஆக்கங்களை video, audio வடிவத்தில் காணலாம் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.
www.tsch.org.au
info@tsch.org.au

## <u>Annual Dinner 2011 – NSW Federation of Community Language Schools</u>






**மூன்றாம் தவணை நிறைவு – 24.09.2011**
**நான்காம் தவணை ஆரம்பம் – 15.10.2011**

## <u>முக்கிய தினங்கள்</u>

15.10.11 – நான்காம் தவணை ஆரம்பம்
26.11.11 – ஆண்டிறுதிப் பரீட்சை
17.12.11 – பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு
17.12.11 – பரிசளிப்பும் இராப்போசன விருந்தும்
17.12.11 – நான்காம் தவணை நிறைவு நாள்

## <u>Ministers Award 2011</u>







**Harmony Day 2011** ஓவியப்போட்டியில் எமது கல்வி நிலைய மாணவர்களுக்கு Participation சான்றிதழ் கிடைக்கப்பெற்றது.



NSW FEDERATION OF COMMUNITY LANGUAGE SCHOOLS
2011 STUDENTS' COMPETITION
The President and the Management Committee
Present this
Certificate
to
Tamil Study Centre Homebush
students' age group
14-18
For participating
in the 2011 students' short film competition
30 July 2011
Albert Vella
President



2011 HARMONY DAY
Poster Competition
"Making our World a Better Place"
Certificate of Participation
PRESENTED TO
Tamil Study Centre
Ernie Friedlander OAM
President,
Moving Forward Together Inc.
A project of the Alfred Dreyfus Unit of B'nai B'rith
SPONSORS
B'nai B'rith Centre Ltd    Cumberland Courier Newspapers
NSW Community Relations Commission    Amitron Pty Ltd